இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 09-10-2024

# பவன் கல்யாணின் பம்மாத்து

மக்களைப் பிளவுபடுத்தும் சனாதனக் கொள்கைக்கு எதிராக மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கருத்துச் சொன்னதும், காலம் காலமாக மக்களைப் பிளவுபடுத்தி வரும் சக்திகள் அவருக்கு எதிராகக் கொந்தளித்தார்கள். ஆனால் சொன்ன சொல்லில் உறுதியாக இருந்தார் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின். இவையெல்லாம் ஓராண்டுக்கு முன்பு. இப்போதும் அந்தத் தீ எரிந்து கொண்டு தான் இருக்கிறது.

புதிதாக ஒரு சனாதனக் காவலர்கள் கிளம்பி இருக்கிறார்கள். ஒருவர் தமிழ்நாட்டில் ஆளுநராக இருக்கிறார். இன்னொருவர் ஆந்திர மாநிலத்தில் துணை முதலமைச்சராக இருக்கிறார். 'சனாதனத்துக்கு எதிராகப் பேசுபவர்கள் அழிந்து போவார்கள்' என்று சாபம் இடு கிறார் ஆந்திர மாநில துணை முதலமைச்சர் பவன் கல்யாண். இந்தப் பூச்சாண்டிகளுக்கும் மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதி அவர்கள் பயப்படவில்லை. அதனையும் அலட்சியப்படுத்தி விட்டார்.

**திருப்பதியில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய பவன் கல்யாண், "சனாதன தர்மத்தை அழிக்கப் போவதாகச் சிலர் சொல்கிறார்கள். உண்மையில், சனாதனத்தை யார் அழிக்க நினைக்கிறார்களோ, அவர்கள்தான் அழிந்து போவார்கள்" என்று சொல்லி இருக்கிறார். இவர்களுக்குத் தெரிந்தது எல்லாம் அழிப்பு வேலைகள்தானே தவிர, ஆக்க வேலைகள் அல்ல.**

பவன் கல்யாணின் வழக்கமான நடிப்புகளில் ஒன்றுதான் இது. 'லட்டு மேட்டர் புட்டுக்கிச்சு'. எனவே, அதைத் திசை திருப்புவதற்காக இப்படிச் சொல்லி இருக்கிறார். 'கடவுளை உங்களது அரசியலுக்கு பயன்படுத்தாதீர்கள்' என்று உச்சந்தலையில் ஓங்கிக் கொட்டி இருக்கிறது உச்சநீதிமன்றம். ஆந்திர மாநில அரசு அமைத்த விசாரணை ஆணையத்தை நிராகரித்திருக்கிறது உச்சநீதிமன்றம். இதற்காக தலை கவிழ்ந்து நிற்கிறார்கள் ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திரபாபுவும், துணை முதலமைச்சர் பவன் கல்யாணும்.

**கோடிக்கணக்கான லட்டுகளை, ஒரு நிமிடத்தில் மணியடித்து சுத்தமானதாக ஆக்கும் காமெடியையும் மக்கள் ரசிக்கவில்லை. இதுவும் பக்தர்களால் கிண்டலடிக்கப்பட்டு விட்டது. உடனே, 11 நாள் உண்ணாவிரதம் என்று பவன் கல்யாண் அறிவித்தார். கோவிலுக்கு பாதயாத்திரை போவதாகச் சொன்னார். கோவிலுக்கு ஏற்பட்ட களங்கத்தை துடைக்கப் போவதாகச் சொன்னார். களங்கம் ஏற்பட்டது கோவிலுக்கு அல்ல. இவர்களது அப்பட்டமான அசிங்க அரசியல்தான் அவமானப்பட்டு நிற்கிறது.**

கோவிலுக்கு உள்ளே போகும்போது இன்னொரு சிக்கலை பவன் கல்யாண் எதிர்கொண்டார். அவரது மனைவி மாற்று மதத்தைச் சேர்ந்தவர். இந்து அல்லாத மாற்று மதத்தவர் கோவிலுக்குள் போனால் நம்பிக்கை பிரமாண பத்திரத்தில் கையெழுத்திட வேண்டும். அவர்களுக்குப் பிறந்த மகளும் மாற்று மதத்தைச் சேர்ந்தவர் என்பதால் கோவிலில் வழிபாடு செய்வதற்கு முன், தேவஸ்தான அலுவலகத்துக்குச் சென்று அது தொடர்பான பிரமாண பத்திரத்தில் கையெழுத்திட்டார். அவர் 18 வயதுக்கு உட்பட்டவர் என்பதால், பவன் கல்யாணும் தன் மகளின் பிரமாண பத்திரத்தில் கையெழுத்திட்டார். இவை அனைத்தும் பா.ஜ.க.வின் வேஷ அரசியலுக்குப் பின்னால் இருக்கும் மர்மங்கள். புலியை விட புலி வேஷம் போடு பவர் அதிகமாக உறுமுவார் அல்லவா? அப்படித்தான் பவன் கல்யாணின் நடிப்புகள் அமைந்துள்ளன. பவன் கல்யாணின் முகத்திரை கிழிந்து தொங்கியது. இதில் இருந்து திசை திருப்ப திடீரென்று சனாதனக் காவலராக மாறினார் பவன் கல்யாண்.

பொய்களை நினைத்த உடன் அவிழ்த்துவிடுவது பவன் கல்யாணின் வழக்கம் தான்.

கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில், "தமிழ் சினிமாவில் தமிழக தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு மட்டுமே வேலை கொடுக்க வேண்டும் என்று தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் கூட்டமைப்பு (ஃபெஃப்சி) முடிவு செய்துள்ளதாக செய்திகள் வெளியாகி வருகின்றன. இத்தகைய புது விதிகள் தமிழ் சினிமாவில் ஆர்.ஆர்.ஆர். போன்ற படங்கள் உருவாவதைத் தடுக்கும்" என்று பவன் கல்யாண் சொன்னார். அப்படி எந்த விதிமுறையும் வகுக்கப்படவில்லை என்பது தான் உண்மை. நடிகர் சங்கத் தலைவர் நாசர் அவர்கள் அதற்கு உடனடியாக மறுப்புத் தெரிவித்து விளக்கம் அளித்தார். ஆனாலும், தான் சொன்ன கருத்தை பவன் கல்யாண் திரும்பப் பெறவில்லை. இப்படி வாய்க்கு வந்தபடி பேசுவதுதான் அவரது வழக்கம்.

பாவம் ஆந்திர மக்கள். அவர்களைக் காப்பாற்றுவதற்கு வழி தெரியாத பவன் கல்யாண், சனாதனத்தைக் காக்கப் புறப்பட்டு விட்டார். அதற்கு முன்னால் எது சனாதனம் என்பதைச் சொல்லி விட்டுக் கிளம்புங்கள் என்பதுதான் நமது அன்பான வேண்டுகோள்.

பவன் கல்யாண் பெயர் மீடியாக்களில் அடிபட்டதும், நம்மூர் ரவி உடனடியாக அதற்குள் புகுந்தார். 'சனாதனம் என்றால் அனைவரும் ஒன்று என்று அர்த்தம்' என்கிறார். அப்படி எந்தப் புத்தகத்தில் இருக்கிறது என்பதுதான் நம்முடைய கேள்வி.


'சனாதனம்' என்றால் மாற்ற முடியாதது என்பதுதான் உண்மைச் சனாதனிகள் சொல்லும் விளக்கம். எதை மாற்ற முடியாது? உனது பிறப்பை, பிறப்பின் கடமையை மாற்ற முடியாது. பிறப்பு என்பது என்ன? ஜாதிதான் பிறப்பு ஆகும்.

**★ "நான்கு வர்ணங்களும் என்னால் உண்டாக்கப்பட்டவை. அவரவர்க்கு உரிய கருமங்களை அவரவர் மீறாமல் செய்ய வேண்டும். அதை மாற்றிச் செயல்பட வைக்க அந்த வர்ண தர்ம உற்பத்தியாளனாகிய என்னால் கூட முடியாது" என்கிறது கீதை. எப்போதோ எழுதப்பட்ட கீதை மட்டுமல்ல, இப்போதும் எழுதப்படும் நூல்களும் அதைத்தான் சொல்கின்றன.**

ஏற்றத்தாழ்வை நியாயப்படுத்தவே முற்பிறப்பு - இப்பிறப்பு என்பதை உருவாக்கினார்கள். முற்பிறப்பில் பாவம் செய்தாய் - அதனால் இப்பிறவியில் இழிசாதியில் பிறந்தாய். அல்லது துன்பங்களை அனுபவிக்கிறாய். இதனைதான் கர்மா என்கிறார்கள். **"கர்மா என்றால் நிரந்தரமானது. மாற்றமுடியாதது என்று பொருள். கர்மத்தை அடிப்படையாகக் கொண்ட தர்மமே சனாதன தர்மம்."** என்று அவர்களது புத்தகம்தான் சொல்கிறது. அகில உலக ஹரே கிருஷ்ணா இயக்கம் வெளியிட்ட 'கீதை உள்ளது உள்ளபடி' என்ற நூலில் பிரபு தாதா சொல்கிறார். Bhagavad gita as it is - என்ற நூலில் இது இருக்கிறது. சனாதனத்தைப் பற்றி பேசுவதற்கு முன்னால், சனாதனம் குறித்த புத்தகத்தை ஒழுங்காக படியுங்கள்.

கர்மம் தர்மம் என்பதெல்லாம் அவரவர் ஜாதி, குலத் தொழிலை நிரந்தரமாகச் செய்து கொண்டே இருக்க வேண்டும் என்பதுதான். முன் வினையை யாராலும் மாற்ற முடியாது. ஒருவனின் பிறப்பு என்பது பூர்வ ஜென்ம வினைப்படி தான் அமையும். அந்தந்த பிறப்புக்கு ஏற்றபடி தான் அவரவர் ஜாதிக்கேற்ற தர்மத்தைச் செய்ய வேண்டும். மாற்றக் கூடாது. ஜாதித் தொழிலை மாற்றக் கூடாது. 'மாறாதது தான் சனாதனம்' என்பதுதான் உண்மைப் பொருள்.

**எனவே, ரவி சொல்லும் விளக்கத்தை உண்மைச் சனாதனிகளும் ஏற்க மாட்டார்கள். இத்தகைய சனாதனத்தைக் காக்க வேண்டும் என்று பவன் கல்யாண் சொல்வதை நாட்டு மக்களும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (7.10.2024) தலைமைச் செயலகத்தில், பஹ்ரைன் நாட்டின் முன்னாள் அமைச்சரும், ஆசிய HRD விருது குழுத் தலைவருமான ஃபாமி ஜோவ்தர் (Mr.Fahmy Jowdher), மாலத்தீவு நாட்டின் முன்னாள் ஜனாதிபதியும், ஆசிய HRD விருது குழு துணைத் தலைவருமான முகமது வஹீத் ஆகியோர் சந்தித்து, ஆசிய HRD Awards சார்பில் சமுதாய மேம்பாட்டிற்காகவும், படைப்பாற்றல், புத்தாக்கத்தை வளர்ப்பதற்கான திறன் மேம்பாட்டு சூழலமைப்பை வலுப்படுத்துவதிலும் உள்ள தலைமைத்துவ உறுதியையும் விடாமுயற்சியையும் அங்கீகரிக்கும் விதமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதினை வழங்கினார்கள். இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஆசிய HRD Awards நிறுவனரும், சைபர்ஜெயா பல்கலைக்கழகத்தின் இணை வேந்தருமான தத்தோ டாக்டர் பாலன், பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் டாக்டர் டேவிட் விட்போர்ஃடு, மலேசியா SMRT Holdings நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மஹா ராமநாதன், மனிதவள மேலாண்மை கழகத்தின் முன்னாள் முதன்மை செயல் அலுவலர் தத்தோ விக்கி, ஆசிய HRD விருதுகள் தலைமை செயல் அலுவலர் பேராசிரியர் சுப்ரா, கே.ஏ.மேத்யூ, (ஓய்வு) ஆகியோர் உடனிருந்தனர்.

# காவல்துறைக்கு புதிய கட்டடங்கள் - முதல்வர் திறந்து வைத்தார்!

முதல் பக்கத் தொடர்ச்சி...

செலவில் கட்டப்பட்டுள்ள 169 காவலர் குடியிருப்புகள், 2 காவல் நிலையங்கள் மற்றும் 2 காவல் துறை கட்டடங்கள் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை**

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது, "காக்கும் பணி எங்கள் பணி" என்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு மக்களுக்கு சேவையாற்றும் துறையாகும். பேரழிவை ஏற்படுத்தும் தீயிலிருந்து உயிர்களையும், உடைமைகளையும் காப்பதோடு, இயற்கை இடர்பாடுகளான வெள்ளம், புயல், நிலச்சரிவுகள் போன்றவைகளிலிருந்தும், மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அழிவுகளிலிருந்தும் மக்களை காப்பதும், அவசர உதவி புரிவதும் இத்துறையின் முக்கிய பணியாகும். இத்துறையின் செயல்திறனை மேம்படுத்திட புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் கட்டித் தருதல், பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தருதல், பல்வேறுநவீன கருவிகள் மற்றும் தீயணைப்பு ஊர்திகளை வழங்குதல் போன்ற பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

**இவ்வரசு பொறுப்பேற்ற இம் மூன்று ஆண்டு காலத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் உட்கட்டமைப்பை மேம்படுத்திடும் வகையில் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களின் விவரங்கள்**

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசால், ரூ.30.94 கோடி செலவில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கான 181 குடியிருப்புகள், ரூ.35.93 கோடி செலவில் 22 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள், ரூ.2.45 கோடி செலவில் 2 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக் கட்டடங்கள், என மொத்தம் ரூ.69.32 கோடி செலவிலான கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

**அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ள கட்டடங்களின் விவரங்கள்**

தேனி மாவட்டம் - போடிநாயக்கனூரில் 2 கோடியே 12 இலட்சத்து 34 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கான 10 குடியிருப்புகள்;

சென்னை மாவட்டம், தியாகராய நகர் மற்றும் மணலி ஆகிய இடங்களில் 6 கோடியே 80 இலட்சத்து 16 ஆயிரம் செலவிலும், மதுரை மாவட்டம் - மதுரை, மீனாட்சி அம்மன் கோவில் மற்றும் கள்ளிக்குடி ஆகிய இடங்களில் 2 கோடியே 71 இலட்சத்து 97 ஆயிரம் செலவிலும், நாமக்கல் மாவட்டம் - கொல்லிமலையில் 1 கோடியே 79 இலட்சத்து 68 ஆயிரம் செலவிலும், தஞ்சாவூர் மாவட்டம் - திருவையாறு மற்றும் திருக்காட்டுப்பள்ளி ஆகிய இடங்களில் 5 கோடியே 34 இலட்சத்து 11 ஆயிரம் செலவிலும் கட்டப்பட்டுள்ள 7 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள்;

என மொத்தம் 18 கோடியே 78 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**தடய அறிவியல் மரபணு ஆய்வகப் பிரிவுக் கட்டடத்தை திறந்து வைத்தல்**

தடய அறிவியல் துறைக்கு தஞ்சாவூரில் 3 கோடியே 75 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தடய அறிவியல் மரபணு ஆய்வகப் பிரிவுக் கட்டடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அபாஷ் குமார், தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியக இயக்குநர் சந்தீப் ராய் ரத்தோர், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சைலேஷ் குமார் யாதவ், தடய அறிவியல் துறை இயக்குநர் (பொறுப்பு) முனைவர் வி. சிவப்பிரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஆளுநருக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி கண்டனம்...!

முதல் பக்கத் தொடர்ச்சி!

பா.ஜ.க.தான். தமிழ்நாட்டில் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் உள்ளிட்ட 16 குற்றவாளிகளை பா.ஜ.க. கட்சியில் இணைத்துள்ளது. சென்னை, தாம்பரம், ஆவடி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருச்சி, பெரம்பலூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, மதுரை உள்ளிட்ட காவல் பகுதிகளில் மட்டும் NDPS Act-இல் கைதான பா.ஜ.க.வைச் சேர்ந்த 14 ரவுடிகள் மீது 23 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன.

போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இது 2020 மற்றும் 2021-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களைவிட முறையே 61% மற்றும் 33% அதிகமானது என்பதை ஆளுநர் அவர்கள் தனது வசதிக்கேற்ப மறந்துவிட்டார்.

2023-ஆம் ஆண்டில், குற்றம்சாட்டப்பட்ட 14,770 பேர் மீது 10,256 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 23,364 கிலோ உலர் கஞ்சா, 0.953 கிலோ ஹெராயின், 39,910 மாத்திரைகள், 1,239 கிலோ கஞ்சா சாக்லேட்டுகள், மெத்தாம்பேட்டமைன், ஆம்பிடமைன் மற்றும் மெத்தகுலோன் உள்ளிட்ட போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது. இந்த ஆண்டு (2024) ஆகஸ்ட் வரை, 9,750 குற்றவாளிகள் மீது 6,053 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 15,092 கிலோ கஞ்சா 90,833 மாத்திரைகள் 93 கிலோ மெத்தகுலோன் மற்றும் 228 கிலோ இதர போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

**பச்சைப் பொய்களை பேசுவது வெட்கக் கேடானது!**

இதையெல்லாம் தெரிந்து கொள்ளாமல் - பா.ஜ.க. மேடையில் நிற்பவராக தன்னை மாற்றிக் கொண்டு பச்சைப் பொய்களை ஒரு ஆளுநர் பேசுவது வெட்கக் கேடானது. புள்ளி விவரங்களைப் பார்த்தாலே ஆளுநர் சொன்னது அப்பட்டமான பொய் என்பது புரியும். "கஞ்சா அல்லாத போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் மத்திய அரசின் அமைப்புகளே கைப்பற்றுகின்றன" என ஆளுநர் சொன்னது வடிக்கட்டிய பொய் என்பது விளங்கும்.

போதைப் பொருள் தொடர்பாக 2022-ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை, 1682 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். போதைப் பொருட்களுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களைப் பொறுத்த வரை இதுநாள் வரையில் 3,914 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. 2022 ஆகஸ்ட் முதல் 2024 ஆகஸ்ட் வரையில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் ரூ.18.03 கோடி சொத்துகளும் 8,949 வங்கிக் கணக்குகளும் முடக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கையால் தான் 2022-இல் நீதிமன்றங்களில் 2,414 வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன. இதில் 80 சதவிகிதம் (1,916) வழக்குகள் தண்டனையில் முடிந்துள்ளன. 2023-இல் தீர்க்கப்பட்ட 3,567 வழக்குகளில், 84 சதவிகித (2988) வழக்குகள் தண்டனையில் முடிவடைந்தன. போதைப் பொருட்களுக்கு எதிராக எடுத்த தீவிர நடவடிக்கை விவரங்களை எல்லாம் ஒரு ஆளுநரால் கேட்டு வாங்கி தெரிந்து கொண்டிருக்க முடியும். ஆனால், அதை தெரிந்து கொண்டால் பொய்க்குற்றம் சாட்ட முடியாதே என்பதற்காக அரசின் மீது அவதூறுகளை அள்ளித் தெளித்திருக்கிறார்.

**போதைப் பொருள் எதிர்ப்பு உறுதிமொழி!**

போதைப் பொருள் நடமாட்டத்தை ஒழிப்பது மட்டுமல்ல - இளைஞர்கள் மற்றும் மாணவர்களிடையே போதைப்பொருள் துஷ்பிரயோகத்திற்கு எதிரான மாபெரும் விழிப்புணர்வு தி.மு.க. ஆட்சியில்தான் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. 2022 செப்டம்பர் 11-ஆம் நாள் எங்கள் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலேயே சென்னையில் போதைப்பொருள் எதிர்ப்பு உறுதிமொழியை மாநில அளவிலான நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து, விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. ஒரே நாளில் 80 லட்சத்திற்கும் மேற்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் உறுதிமொழி எடுத்தனர். முதலமைச்சர் அவர்கள், போதைப் பொருள் விற்பனை மற்றும் துஷ்பிரயோகத்தை ஒழிக்க ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, அறிவுறுத்தல்களை தொடர்ந்து வழங்கி வருகிறார். போதைப் பொருள் தீமைகள் குறித்த விழிப்புணர்வு காணொலி 1.5 கோடி மாணவர்களுக்குக் காண்பிக்கப்பட்டது. கல்வி நிறுவனங்களில் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட 'போதைக்கு எதிரான குழுக்கள்' உருவாக்கப்பட்டன.

**ஆளுநருக்கு தார்மீக உரிமையிருக்கிறதா?**

அ.தி.மு.க. ஆட்சியில் அமைச்சர்களே குட்கா விற்பனைக்கு துணை போனார்கள். குட்கா வழக்கில் சிக்கிக் கொண்டார்கள். அவர்கள் மீதான வழக்கிற்கு அனுமதி கொடுக்கும் கோப்பை கூட ஒரு வருடத்திற்கும் மேலாக கிடப்பில் போட்டு வைத்திருந்த ஆளுநர், போதைப் பொருள் ஒழிப்புப் பற்றி இப்போது வாய்கிழியப் பேசுவது விந்தையாகவும், வேடிக்கையாகவும் இருக்கிறது என்பதை விட, தி.மு.க. அரசின் தீவிர நடவடிக்கையைக் கொச்சைப்படுத்திப் பேசும் தார்மீக உரிமை ஆளுநருக்கு இருக்கிறதா? என்று கேட்க விரும்புகிறேன்.

NDPS என்ற போதை மருந்துகள் மற்றும் உளவெறியூட்டும் பொருட்கள் சட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் கைதானவர்களில் பா.ஜ.க. வைச் சேர்ந்த ரவுடிகள்தான் அதிக அளவில் இருக்கிறார்கள். அத்தகைய போதைப் பொருள் கடத்தல்காரர்கள், ரவுடிகளை தேடித் தேடி கட்சியில் சேர்த்துக் கொண்ட கட்சி தமிழ்நாடு

**வாய்த்திறக்காத ஆளுநர்!**

போதைப் பொருள் வழக்குகளில் இருக்கும் பா.ஜ.க.வினரின் பிம்பத்தை மறைக்க ஆளுநர் ரவி அவர்கள் தி.மு.க. ஆட்சி மீது அநியாயமாகப் பொய் குற்றச்சாட்டை போகிற போக்கில் வீசிச் செல்கிறார். இதற்காக அரசு பணத்தில் சென்று பிரச்சாரம் செய்கிறார் என்பது அவர் வகிக்கும் பதவிக்கும் - அரசியல் நெறிமுறைகளுக்கும் உகந்தது அல்ல!

இந்தியா முழுவதும் கூட பா.ஜ.க. நிர்வாகிகள் போதைப் பொருள் கடத்தல் வழக்குகளில் சிக்கியிருக்கிறார்கள். அவர்களைப் பற்றி எல்லாம் ஆளுநர் ஏன் பேச மறுக்கிறார். போதை பொருள்களின் தலைநகர் குஜராத் பற்றியெல்லாம் ஏன் வாய் திறப்பதில்லை?

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.